REPORTING SECTION
(Council)

1984 பிப்ரவரி 16]

செல்வி ஆ. லீலாவதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூறியதுபோல, செகண்டரிகிரேட் ஆசிரியர்களுக்கு மட்டும் 20 ஆண்டுகள் பணி செய்தால், ஸ்பெஷல் கிரேடு கொடுக்கப்படுகிறது. ஏனைய ஆசிரியர்களுக்கும், 20 ஆண்டுகள் பணி புரிந்த பிறகு, ஸ்பெஷல் கிரேடு கொடுக்காதது, ஒரு கண்ணிலே வெண்ணையும், இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பும் வைப்பது மாதிரி இருக்கிறது. ஆகையால் இவர்களுக்கும் ஸ்பெஷல் கிரேடு கொடுக்க அரசு முன்வரவேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, 20 ஆண்டு பணிக்கால அடிப்படையில், ஹையர் கிரேடு ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், அதே ஊதிய விகிதத்தில் உள்ள எல்லா ஆசிரியர்களும், மேலும் பட்டதாரி ஆசிரியர்களும், அவர்களது ஊதிய விகிதத்தில் உள்ள எல்லா ஆசிரியர்களும் சிறப்பு நிலை 1—6—1981, 1—4—1982 முதல் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மற்றவர்களைப்பற்றி விவரமில்லை.

தலைஞாயிறிலிருந்து திருத்துறைப்பூண்டிக்குப் பேருந்து விடுதல்.

* 29. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் தலைஞாயிறிலிருந்து வாட்டாகுடி, உம்பளாச்சேரி வழியாக, திருத்துறைப்பூண்டிக்குப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, இதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஊர்கள் மிகவும் குக்கிராமங்கள் ஆகும். போக்குவரத்துக்கு வசதி இல்லாமல் மக்கள் எல்லாம் அவதிப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதுவும் இந்த ஊர்களில் உள்ளவர்கள் பேருந்தையே பார்த்ததில்லை என்கிற நிலை இருக்கிறது. ஆகவே இப்போதில்லாவிட்டாலும், அமைச்சரவர்கள் மீண்டும் செயற்குறிப்பினைத் தயாரித்து, அதை வருங்காலத்தில் விரிவாகச் செயல்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்தப் பகுதியில் இருக்கிற பாதைகள் இப்போது பேருந்துகள் போவதற்கு சாத்தியமாக இல்லை என்று குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இதில் முன்னேற்றம் ஏற்படுமானால், தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

[1984 பிப்ரவரி 16

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, பேருந்து வேண்டுமென்று கோரிக்கை எழுப்பினால், பேருந்து ஓடுவதற்கு சாலையும் வேண்டுமென்றுதான் பொருள்படும். எனவே சாலை வசதிக்கும் ஏற்பாடு செய்வதற்கு அந்தத் துறை அமைச்சர் அவர்களுக்கும் பரிந்துரை செய்து, சாலையையும் உருவாக்க முன்வருவார்களா ? அது சற்று அதிகப்படியான பளு என்றாலும் உருவாக்க முன்வருவார்கலா ? அது சற்று அதிகப்படியான பளு என்றாலும் கோளோடு அதைச் செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, நல்ல காரியத்தைச் செய்வதற்கு எவ்வளவு பளு இருந்தாலும், அதைச் சுமந்து நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம். இந்தக் கேள்வியை முதலில் போட்டுவிட்டு, பிறகு அந்தக் கேள்வியைப் போட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். இதே கேள்வியிலே கூட அந்தப் பகுதியிலே சாலை வசதியைச் செய்து கொடுக்க அரசாங்கம் தயாரா என்று கேட்டிருந்தால் கூட, அதையும் கூட நாங்கள் விசாரித்து அந்தத் துறையினரோடு பேசி முடிவு எடுத்திருந்திருக்கலாம். தொடர்ந்து செய்வதற்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது தலைஞாயிறு பாதை விஷயம். டாக்டர் இரா. சனார்த்தனம் . . .

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவரவர்களே, இதைப்போன்று பாதை அவ்வளவு சரியாக இல்லாத இடங்களில் மினி பஸ்ஸையாவது விடுவது பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அங்குள்ள மக்கள் பஸ்ஸையே பார்த்ததில்லை என்று சொன்னார்கள். அதனால் அவர்களுக்கு பஸ்ஸைப் பார்க்க ஆவல் இருந்தால், அதையாவது அமைச்சரவர்கள் நிறைவேற்றுவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏதோ சொந்த ஊர் என்ற காரணத்தால் கொஞ்சம் வேகமாகச் சொல்லி அந்தக் காரியத்தை நிறைவேற்ற முடியாதா என்ற ஆர்வத்திலே சொல்லியிருக்கிறார். அதையே உறுப்பினர் அவர்கள் முழுமையாக நம்பிக்கொண்டிருக்கக் கூடாது. மினி பஸ் ஓடவேண்டும் என்றாலும், பாதை வேண்டும். பாதை இருந்தால்தான் அது சாத்தியம். அந்த பஸ்ஸிற்கும் நான்கு சக்கரங்கள்தான், இந்த பஸ்ஸிற்கும் நான்கு சக்கரங்கள்தான். எனவே பாதை இருந்தால்தான் எந்த வண்டியும் விட முடியும்.